[1978 மார்ச் 31

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, கிணறுகளை வெட்டுவதற்கு அரசு உதவி செய்வதாக இருந்தாலும் நிலத்தடி நீர் சான்றிதழ் பெற்ருல்தான் மினனிணைப்புத் தரும் நிலை இருப்பதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, அதை மறுபரிசீலனை செய்து, வேறு உத்தரவுப்போட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவரவர்களே, அப்பேர்ப்பட்ட நிலைமை இருந்தது உண்மை. இப்போது கூட்டுறவுத் துறை மின்சார வாரியத்தோடு தொடர்புகொண்டு, ஏற்கனவே தோண்டப்பட்டுள்ள கிணறுகளுக்குப் பொருத்தப் பட்டுள்ள பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்புக் கொடுக்கும் முயற்சியிலே ஈடுபாடு கொண்டிருக்கிறது.

தென்ஞற்காடு மாவட்டத்தில் வெட்டப்பட்ட கிணறுகள்

* 738 வினு—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

தென்ஞற்காடு மாவட்டத்தில் நிலவள வங்கிகளில் கடன் பெற்று போடப்பட்ட கிணறுகள். போர்வெல் இவைகளுள் எத்தனை கிணறுகளுக்கு இன்னும் மின் இணைப்புக் கொடுக்கவேண்டியுள்ளது?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: தென்ஞற்காடு மாவட்டத்தில் நிலவள வங்கிகள் மூலமாகக் கடன் பெற்று தோண்டப்பட்ட கிணறுகளில் 31-1-1978 தேதிவரை 91 திறந்த கிணறுகளுக்கும், 66 குழாய்க் கிணறுகளுக்கும் மின் இணைப்பு கொடுக்க வேண்டியுள்ளது.

திரு. துரை கலியமூர்த்தி: தலைவரவர்களே, மின்னிணைப்புக் கொடுக்க வேண்டுமென்ற 66 குழாய்க் கிணறுகளுக்கும் இன்னும் எவ்வளவு நாட்களுக்குள் கொடுக்கப்படும் என்று அறிவிப்பார்களா? சிதம்பரம் பகுதியில் இன்னும் ஏராளமான கிணறுகளுக்கு மின்னிணைப்புக் கொடுக்கப்படவில்லை. அவைகளுக்கு உடனடியாக இணைப்புக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவரவர்களே, தென்ஞற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மின்னிணைப்புக் கொடுக்கப்படாத கிணறுகளுக்குக் கொடுப்பதற்கான முயற்சியில் கூட்டுறவுத் துறை இன்றையதினம் ஈடுபாடு கொண்டிருக்கிறது. சிதம்பரம் வட்டத்தைப்பற்றிய விவரம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

1978 மார்ச் 31]

திரு. கே. பண்ணே சேதுராம்: தலைவரவர்களே, நிலத்தடி நீர் இலாகாவிலிருந்து சான்றிதழ் பெற்றுத்தந்தால்தான் மின்னிணைப்பு கொடுக்கப்படும் என்ற விதியைத் தளர்த்தி 50,000 கிணறுகளுக்கு மின்னிணைப்புக் கொடுக்க அரசு அறிவித்திருந்தது. இப்போது அதுபற்றிய உத்தரவு போடப்பட்டுவிட்டதா? இதுவரை எத்தனை கிணறுகளுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: நான் கூட்டுறவுத் துறை அமைச்சராக இருக்கிறேன். பொதுப்பணித் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டிய கேள்வி இது.

திரு. எம். அண்ணுமலை: தலைவரவர்களே, நிலவள வங்கி மூலம் கடன் பெறும் விவசாயிகளுக்கு வேறு ஒரு இடத்தில் கடன் இருந்தால், அவர்களுக்குக் கடன் இல்லை என்று விதி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதனுல் பெரும்பாலான சாதாரண விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறுர்கள். அதை அரசு பரிசீலிக்குமா? குறைவான கடன் மதிப்பீடு இருந்தால் அவர்களுக்குக் கடன் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, மூலக்கேள்வி பம்புசெட்டுகளுக்கு மின்னிணைப்புக் கொடுப்பது பற்றியது. அந்தக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

வேலைவாய்ப்பளிக்கும் கல்வி முறை

* 739 வினு—திரு. கரு. ராம கரியமாணிக்கம் அம்பலம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேலை வாய்ப்பளிக்கும் கல்வி முறையை ஏற்படுத்த தமிழக அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) தற்பொழுதுள்ள கல்வி முறையை அவ்வப்பொழுது மாற்றியமைக்கும் பொழுது, கல்வி முறை வேலை வாய்ப்பளிப்பதாக இருக்க வேண்டுமென்ற நோக்கம் ஓரளவு, இயன்றவரை கருத்திற் கொள்ளப்பட்டுத்தான் வந்துள்ளது. எனினும் இனி இந்தக் குறிக்கோளுக்கு மேலும் முதன்மையளிக்க இவ்வரசு கருதியுள்ளது. 1978-79 முதல் செயல்படவிருக்கும் புதிய ''மேல் உயர்நிலைப் பள்ளிக் கல்வி'' நிலையில் தொழில் சார்ந்ததும் வேலை வாய்ப்புக்கு வகை செய்வதும் ஆன பாடமுறைகளைப் புகுத்த அரசு கருதியுள்ளது.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தொழில் கல்வியைப் பொறுத்த மட்டில் 10 ஃப்ளஸ் 2 என்ற திட்டத்தின் மூலம் அளிப்பதாக அமைச்சரவர்கள் சொன்னுர்கள்.